# சம்ஸ்க்ருதம் கற்கலாம்!

(பகுதி – 1)



ப்ரக்ஞன்

# சம்ஸ்க்ருதம் கற்கலாம்!

(பகுதி – 1)

**ஆசிரியர்**

**ப்ரக்ஞன்**

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சம்ஸ்க்ருதம் கற்கலாம்! (பகுதி– 1) |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| வகை | : | மொழிக்கல்வி |
| முதற்பதிப்பு | : | 2023 |
| வெளியீடு | : | பராபரம் பாடசாலை |
| பக்கங்கள் | : | 118 |
| விலை | : | 200/- |

# சம்ஸ்க்ருதம் மொழி கற்கலாம்! – இணையதள தமிழ் வழி!

वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये।

जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ॥

vagarthaviv sampruktau vagarthapratipattaye |

jagatah pitarau vande parvatiparameshvarau ||

வகர்த்தவிவ் ஸம்ப்ருக்தௌ வகர்த்தப்ரதிபாதயே |

ஜகத: பிதரௌ வந்தே பார்வதிபரமேஸ்வரௌ ||

இப்பிரபஞ்சத்தின் தாய் தந்தையரான பார்வதி, பரமேஸ்வரனை வணங்கி, நாம் இந்த நூலின் வாயிலாக சம்ஸ்க்ருதம் கற்றுக் கொள்ள வந்திருக்கின்றோம். அதாவது, தூய அறிவாகிய சிவத்தையும், அதன் வெளிப்பாடாகிய மனதையும் கொண்டே நாம் இந்த மொழி அறிவைப் பெறப் போகின்றோம்.

மஹாகவி காளிதாசனால் பாடப்பட்ட இந்த ஸ்லோகம் ரகுவம்ஸத்தில் இடம் பெற்றுள்ளது.

"சொல்லையும் பொருளையும் நிலைநிறுத்த சொல்–பொருளாய் இணைபிரியாதிருக்கும் ஜகத்தின் அம்மை அப்பனாய் நிற்கின்ற பார்வதி–பரமேஸ்வரனை நான் வணங்குகிறேன்!"

பார்வதி–பரமேஸ்வரனின் அருள் நமக்கு சம்ஸ்க்ருத மொழி அறிவைக் கொடுத்து காக்கட்டும்.

சம்ஸ்க்ருத மொழி பாரத நாட்டின் அரும்பெரும் பொக்கிஷம்! சம்ஸ்க்ருதம் **"கீர்வாணி", "தேவபாஷா"** (தேவர்களின் மொழி) என்றெல்லாம் அறியப்படுகிறது.

இன்று உலகின் பல நாடுகளில் சம்ஸ்க்ருதம் பரவலாக முறையாக போதிக்கப்பட்டு வருகிறது.

வாக்கிய அமைப்பில் ஸ்ம்ஸ்க்ருதத்திற்கும், தமிழுக்கம் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆங்கில வழியைக்காட்டிலும் தமிழ் வழி சம்ஸ்க்ருதம் கற்பது மிகவும் எளிதாகும்.

நீங்கள் சம்ஸ்க்ருத எழுத்துக்களை அறியாதவரா? அல்லது சம்ஸ்க்ருதம் எழுதப் படிக்க அறிந்தவரா? இதில் நீங்கள் எந்த நிலையிலும், சம்ஸ்க்ருதம் கற்றுக் கொள்ள வந்திருந்தாலும் சரி! இங்கு கொடுக்கப்படுகின்ற பயிற்சிப் பாடங்கள் எல்லாமே உங்களை உற்சாகத்துடன் "**சம்ஸ்க்ருத மொழி**" அறிவைப் பெற உதவ இருக்கின்றன.

ஆகவே, அனைவரும் ஆர்வத்துடன் சம்ஸ்க்ருத மொழி அறிவை பெறலாம் வாருங்கள். இந்த சம்ஸ்க்ருத மொழி அறிவைக் கொடுக்கும் புத்தகங்கள் மூன்று பகுதிகளாக கொடுக்கப்பட உள்ளன.

அவைகள் முறையே, பகுதி – 1 (**முதல் நிலை பாடங்கள்**), பகுதி – 2 (**இடை நிலை பாடங்கள்**), இறுதியாக பகுதி – 3 (**உயர் நிலை பாடங்கள்**) என உங்களுக்கு வேண்டிய வகையில் படிப்படியாக இந்த பாடங்கள் வழி நடத்திக் கொண்டு செல்ல உள்ளன.

அதுவும், உங்களுக்கு விருப்பமுள்ள உங்களது தாய்மொழியான தமிழ் மொழியிலேயே சம்ஸ்க்ருதம் கற்க தொடங்குவோம்.

ஆகவே, இந்த நூலைக் கற்பதற்கு தடைகள் வராமல், இருக்கும் வகையில் எல்லாம் வல்ல அந்த தூய அறிவு வழி நடத்திச் செல்லட்டும்.

அனைவருக்கும் எனது உள்ளம் கனிந்த, அன்பு வணக்கங்கள் மற்றும் வாழ்த்துகள்!

வாழ்க பல்லாண்டு!

வாழ்க மனநிறைவுடன்!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# सरलं संस्कृतपठनम्

## முதல் நிலை – प्रावेशिकः स्तरः

சம்ஸ்க்ருத  முதல் நிலை பாடங்கள் சம்ஸ்க்ருதம் அரிச்சுவடியிலிருந்து கற்பவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

சம்ஸ்க்ருத மொழி ஓரளவு பரிச்சயம் உள்ளவர்க்கும் தொடக்கப் புள்ளிகளாய் உதவும் வண்ணம் நான்கு வித பகுதிகளாய் பிரிக்கப்பட்டுள்ளது.

<u>பகுதி 1 சம்ஸ்க்ருத எழுத்தறிவோம் – वर्णमाला (வர்ணமாலா)</u>

பாடங்கள் அரிச்சுவடியிலிருந்து தொடங்கின்றன. இந்தப் படிவில் நீங்கள் சம்ஸ்க்ருத எழுத்துக்களை உச்சரிக்க மற்றும் எழுதக் கற்பீர்கள். படிவின் இறுதியில் உங்களால் சம்ஸ்க்ருத சொற்களை எழுதவும் படிக்கவும் இயலும்.

<u>பகுதி 2 சம்ஸ்க்ருத வினை மற்றும் பெயர்ச்சொற்கள் – संस्कृत-नामपदानि क्रियापदानि च</u>

இந்தப் படிவில் சம்ஸ்க்ருத இலக்கணம் எளிய முறையில் அறிமுகப் படுத்தப்படுகிறது. எளிய சம்ஸ்க்ருத வாக்கியங்களை எழுதி மகிழ்வீர்கள்!!

<u>பகுதி 3 சம்ஸ்க்ருத வாக்கிய அமைப்பு – संस्कृत-वाक्यरचना</u>

நீங்கள் முழுமையான சம்ஸ்க்ருத வாக்கியங்களை இலக்கணப் பிழை இல்லாமல் எழுதக் கற்பீர்கள்!

<u>பகுதி 4 சம்ஸ்க்ருத சிறு பாடங்கள் – संस्कृत–लघुपाठानि</u>

இந்தப் பகுதியில் ஒன்று அல்லது இரண்டு பத்தியில் அமைந்த சிறு பாடங்கள் உள்ளன. இவைகள் இந்த நிலையில் கற்ற திறனை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன!

நீங்கள் விரும்பும் கால அளவுகளில் சம்ஸ்க்ருதம் கற்க ஏதுவாக ஒவ்வொரு படிவிலும் பாடங்கள் சிறியதாக அமைந்துள்ளன.

முதல் நிலையில் பகுதிகளைப் பார்த்து, நீங்கள் விரும்பும் பாடங்களைத் தேர்ந்தெடுத்து சம்ஸ்க்ருதம் கற்கத் தொடங்குங்கள்.

## முதல் நிலைப்பாடங்கள்

### பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம்

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

முதல் நிலை, சம்ஸ்க்ருதம் முதன்மதலாக கற்க தொடங்குபவர்களுக்கு தொடக்க நிலையாகவும் அமைகிறது.

அரிச்சுவடியிலிருந்து தொடங்கும் உங்களால் இந்த முதல் பகுதியின் இறுதியில் சம்ஸ்க்ருத சொற்களை எழுதவும் படிக்கவும் இயலும்.

எழுத்துக்களைப் பார்த்து எழுதும் வண்ணம் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைப் படங்கள் ஒரு நேரடி ஆசிரியரக்கு இணையாக உதவுகின்றன.

ஒருவேளை நீங்கள் ஓரளவு சம்ஸ்க்ருத அறிவுடையவராக இருக்கலாம். உங்களுக்கும் சிலப் பாடங்கள் சுவாரஸ்யமானவையாக இருக்கும்.

சம்ஸ்க்ருத மொழி அறிவு பெற அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

शुभमस्तु

# சம்ஸ்க்ருத எழுத்தறிவோம் – **वर्णमाला** (வர்ணமாலா)

சம்ஸ்க்ருத எழுத்தறிவோம் – वर्णमाला


பாடம்–1 அறிச்சுவடி அறிவோம் – वर्णमाला–परिचयः

பாடம்–2 அறிச்சுவடி – பொது வகைபாடு – संस्कृतवर्णानां सामान्यविभागः

பாடம்–3 அறிச்சுவடி – ஒலி உற்பத்தி வகைபாடு – संस्कृतवर्णानां स्थानीयविभागः

பாடம்–4 சம்ஸ்க்ருத உயிர் எழுத்துக்கள் – स्वराः

பாடம்–5 சம்ஸ்க்ருத மெய் எழுத்துக்கள் – व्यञ्जनानि

பாடம்–6 எழுத  கற்போம் – உயிர் எழுத்துக்கள் – लेखनाभ्यासः – स्वरवर्णाः

பாடம்–7 எழுத கற்போம் – மெய் எழுத்துக்கள் – लेखनाभ्यासः – व्यञ्जनवर्णाः

பாடம்–8 எழுத கற்போம் – கூட்டெழுத்துக்கள் – लेखनाभ्यासः – संयुक्तवर्णाः

பாடம்–9 சம்ஸ்க்ருத எழுத்துக்குறிகள் – स्वरमात्राः

பாடம்–10 சம்ஸ்க்ருத கூட்டெழுத்துக்கள் – संयुक्ताक्षराणि

பாடம்–11 சம்ஸ்க்ருத சொற்பயிற்சி – संस्कृतपदानि

பாடம்–12 சம்ஸ்க்ருத பிரதிப் பெயர்சொற்கள் – सर्वनामशब्दाः

பாடம்–13 சம்ஸ்க்ருத சொல்லகராதி – सामान्यशब्दसङ्ग्रहः

பாடம்–14 சம்ஸ்க்ருத எண்ணறிவோம் – संस्कृत–संख्यापदानि

பாடம்–15 நேரம் பார்க்கலாம்– घण्टावादनम्

பாரத நாட்டின் பாரம்பரியத்தையொட்டி, இது எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் வெளிப்படுவதால், இந்த சம்ஸ்க்ருதக் கல்வி தடைகளின்றி தொடர வேண்டி, முதல் பாடத்தை கணேச ஸ்துதியுடன் தொடங்குவோம்.

वक्रतुण्ड महाकाय सूर्यकोटि समप्रभ ।
निर्विघ्नं कुरु मे देव सर्वकार्येषु सर्वदा ॥

வக்ரதுண்ட மஹாகாய, ஸூர்யகோடி ஸமப்ரப |
நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா ||

அடுத்து கல்விக்கான தேவதை கலைவாணி எனும் சரஸ்வதியை போற்றுவோம்.

सरस्वति नमस्तुभ्यं वरदे कामरूपिणि ।
विद्यारम्भं करिष्यामि सिद्धिर्भवतु मे सदा ॥

சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி சித்திர்பவது மே சதா

தமிழ் மொழியைப்போல சம்ஸ்க்ருதத்திலும் எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள் (स्वरवर्णाः), மெய்யெழுத்துக்கள் (व्यञ्जनवर्णाः) என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பாணினியின் ஸூத்திரங்களை ஒட்டி இவைகள் முறையே அல் எழுத்துக்கள் (अल् वर्णाः) என்றும் ஹல் எழுத்துக்கள் (हल् वर्णाः) என்றும் பெருமளவில் கூறப்படுகின்றன.

இந்த சம்ஸ்க்ருத பாடங்கள் எல்லாமே நமது பாரம்பரிய மரபை அனுசரித்து தேவநாகரீ (देवनागरी) எனும் எழுத்து வடிவங்கள் கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாடத்தில் தேவநாகரீ எழுத்துக்களுடன் ஒத்த தமிழ் எழுத்துக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் சம்ஸ்க்ருத உயிர் எழுத்துக்களை அறிமுகப் படுத்துகிறோம்.

**<u>சம்ஸ்க்ருத உயிர் எழுத்துக்கள் स्वरवर्णाः (ஸ்வரவர்ணா:)</u>**

अ – அ

आ – ஆ

इ – இ

ई – ஈ

उ – உ

ऊ – ஊ

ऋ – ரு

ॠ – ர்ரு

ऌ – லு

ए – ஏ

ऐ – ஐ

# ओ – ஓ

# औ – ஔ

# अं – அம்

# अः – அஹ

தமிழ் மொழியில் உள்ள குறில் எழுத்துக்களான எ மற்றும் ஒ சம்ஸ்க்ருத அறிச்சுவடியில் இல்லை.

சம்ஸ்க்ருத மெய்யெழுத்தக்களான ऋ, ॠ மற்றும் ऌ தமிழில் இல்லை.

அடுத்து, अं – அனுஸ்வார: மற்றும் अः – விஸர்க: எனும் இந்த இரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்துக்களாகவும், மெய் எழுத்துக்களாகவும் கருதப்படுவதில்லை.

இவ்வெழுத்துக்கள் உயிர் எழுத்துக்களை தொடர்ந்து வருவதால், இவைகள் உயிர் எழுத்துக்கள் வரிசையில் இடம் பெறுகின்றன.

அனுஸ்வார: வாய் மூடும் போதும், விஸர்க: உச்சரிப்பு ஒலியின் லேசான அதிர்வையும் ஸ்வர ஒலிகளுக்கு உண்டாக்குகின்றன.

## <u>சம்ஸ்க்ருத மெய்யெழுத்துக்கள் व्यञ्जनवर्णाः</u>

क – ka

ख – kha

ग – ga

घ – gha

ङ – ṅa

च – ca

छ – cha

ज – ja

झ – jha

ञ – ña

ट – ṭa

ठ – ṭha

ड – ḍa

ढ – ḍha

ण – ṇa

त – ta

थ – tha

द – da

ध – dha

न – na

प – pa

फ – pha

ब – ba

भ – bha

म – ma

य – ya

र – ra

ल – la

व – va

श – śa

ष – ṣa

स – sa

ह – ha

# முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம்

பாடம் 2 – அறிச்சுவடி பொது வகைப்பாடு

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

द्वितीयः पाठः – संस्कृतवर्णानां सामान्यविभागाः

இப்போது, நாம் கற்கப் போவது........

ஸமஸ்க்ருத உயிரெழுத்து வகைகள் – ஸ்வர வகைகள் – स्वरविभागाः

சம்ஸ்க்ருத மெய்யெழுத்து வகைகள் – வ்யஞ்சன வகைகள் – व्यञ्जनविभागः

முதல் பாடத்தில் நாம் சம்ஸ்க்ருத எழுத்துக்களைப் பார்த்து அவற்றின் ஒலி வடிவங்களை பார்க்கலாம்.

இப்பாடத்தில் உயிர் மெய்யெழுத்துக்களின் உள்வகைப்பாடுகளைக் கற்கலாம்.

துவக்கத்தில் எழுத்துக்களின் பலவுதமான பிரிவுகள் உங்களை சற்றே திணறடிக்கலாம்.

பிரிவுகளின் அடிப்படை முழுதும் விளங்காவிடினும், இன்னும் சற்று மேலேப் படிக்குமாறு வேண்டுகிறோம்.

இந்த ஆரம்பப் பாடங்களின் நோக்கம் தொடக்க நிலையில் கற்பவர்களுக்கு சம்ஸ்க்ருத எழுத்துக்களுடன் நல்ல பரிச்சயம் ஏற்பட வேண்டும் என்பதே எனது நோக்கம்.

சம்ஸ்க்ருத உயிரெழுத்துக்கள் ஒலிப்பதற்கான நேரத்தைக் கணக்கிட்டு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ह्रस्व–स्वरा: குறிலெழுத்துக்கள் (ஹ்ரஸ்வ (ह्रस्व) எழுத்துக்கள்)

दीर्घ–स्वराः நெடிலெழுத்துக்கள் (தீர்க்க (दीर्घ) எழுத்துக்கள்)

प्लुत स्वराः நீண்ட நெடிலெழுத்துக்கள் (ப்லுத (प्लुत) எழுத்துக்கள்)

குறிலெழுத்தை உச்சரிக்க ஒரு மாத்திரை (मात्रा) அளவு நேரம் தேவைப்படுவதாக கணக்கிடப்படுகிறது.

இந்த கணக்களவின் அடிப்படையில் நெடில் மற்றும் நீண்ட நெடிலெழுத்துக்களை உச்சரிக்க முறையே இரண்டு மற்றும் மூன்றும் அதற்கு அதிகமாகவும் மாத்திரைகள் அளவுள்ள நேரம் தேவைப்படுகிறது.

நீண்ட நெடிலெழுத்துக்கள் வேத மந்திரங்களில் ஒலிக்கப்படுகின்றன.

தொடக்க நிலைப் பாடங்களில் இவ்வடிவுள்ள எழுத்துக்கள் இடம் பெறுவதில்லை.

இப்போது, முதல் பாடத்தில் நாம் கற்ற 13 உயிரெழுத்துக்கள் குறில் மற்றும் நெடிலென இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன.

<u>உயிர் எழுத்துக்கள் स्वरवर्णा:</u>

ह्रस्व–स्वरा: குறில்கள் अ, इ, उ, ऋ, ऌ என மொத்தம் = 5

दीर्घ–स्वराः நெடில்கள் आ, ई, ऊ, ॠ, ए, ऐ, ओ, औ என மொத்தம் = 8

प्लुत–स्वराः நீண்ட நெடில்கள் अ, इ, उ, ऋ, ऌ, ए, ऐ, ओ, औ மொத்தம் = 9

உயிரெழுத்துக்கள் உச்சரிக்கப்படும் பொழுது காற்று வாய் வழியாக வெளியேறுகிறது

अ इ उ ऋ ऌ மற்றும் आ ई ऊ ॠ ஒருயிரெழுத்துக்கள் என்று அறியப்படுகின்றன.

अ इ उ ऋ ஆகிய குறிலெழுத்துக்களின் நெடில்களாக முறையே आ ई ऊ ॠ அமைந்துள்ளன.

ऌ உயிரெழுத்திற்கு நெடில் வடிவு கிடையாது.

நெடிலெழுத்துக்களான ए ऐ ओ औ ஆகிய இவற்றிற்கு குறில் வடிவுகள் இல்லை.

இவ்வெழுத்துக்கள் ஈருயிரெழுத்துக்களாக (Diphthongs) அறியப்படுகின்றன.

குறில், நெடில் மற்றும் நீண்ட நெடில் வகைப்பாடுகள் எழுத்துக்களை ஒலிக்கத் தேவையான நேரத்தைப் பொறுத்து அமைந்துள்ளன

ஒருயிர் எழுத்துக்களான अ इ उ ऋ ऌ க்கும் மற்றும் ஈருயிர் எழுத்துக்களான ए ऐ ओ औ க்கும் நீண்ட நெடில் வடிவங்களும் (प्लुत) உள்ளன.

சம்ஸ்க்ருத உயிரெழுத்துக்களை ஒலிக்கும் முறைகளின் அடிப்படையில் கீழ்க்கண்டப் பாகுபாடுகளும் முக்கியமாடவை.

ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் (உயிரெழுத்திற்கும்) அனுநாஸிக ஸ்வரம் (अनुनासिकः) அனனுநாஸிக ஸ்வரம் (अननुनासिकः) என்று இருவகை வடிவங்கள் உண்டு,

ஒலிக்கும் ஸ்ருதியை அனுஸரித்து உதாத்த (उदात्तः), அனுதாத்த (अनुदात्तः) மற்றும் ஸ்வரித (स्वरितः) வடிவங்களை ஒவ்வொரு ஸ்வலமும் அடைகின்றது.

இப்பொழுது மெய்யெழுத்துக்கள் எவ்விதம் வகைப்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்!

## சம்ஸ்க்ருத மெய்யெழுத்துக்கள் **व्यञ्जनवर्णाः**

स्पर्श–व्यञ्जनाः மூடொலி எழுத்துக்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| क् | ख् | ग् | घ् | ङ् | (ங) | |
| च् | छ् | ज् | झ् | ञ् | (ஞ) | |
| ट् | ठ् | ड् | ढ् | ण् | (ண) | |
| त् | थ् | द् | ध् | न् | (ன) | |
| प् | फ् | ब् | भ् | म् | – | மொத்தம் = 25 |

अन्तःस्थ–व्यञ्जनाः அரை உயிர் எழுத்துக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| य् | र् | ल् | व् | – | மொத்தம் = 4 |

ऊष्म–व्यञ्जनाः சீரொலி எழுத்துக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| श् | ष् | स् | ह् | – | மொத்தம் = 4 |
| (ச) | (ஷ) | (ஸ) | (ஹ) | | |

மெய்யெழுத்துக்கள் உச்சரிக்கப்படும்பொழுது வாய் உருப்புகளின் பயன்பாட்டை ஒட்டி மேல் காட்டிய வகைப்பாடுகள் அமைந்துள்ளன.

மூடொலிகள் (स्पर्श–व्यञ्जनाः) உச்சரிக்கப்படும்பொழுது வாய் உருப்புகள் முற்றிலும் மூடுகின்றன.

காற்றை முதலில் தடுத்து பின் வெளிவிடுவதன் மூலம் அரை உயிரெழுத்துக்கள் ஒலிக்கப்படுகின்றன.

சீரொலிகள் காற்றை லேசாக வெளிவிட்டு உச்சரிக்கப்படுகின்றன. 'ह' தொண்டையிலிருந்து ஒலிக்கப்படுகின்றது.

மெய்யெழுத்துக்களை உயிர்ரெழுத்துக்களுடன் சேர்த்தே உச்சரிக்க முடியும். மெய்யெழுத்துக்களை தனியாக எழுதும்போது ஹல் சின்ஹம் என்ற சிறியக்கோடு கீழே சேர்க்கப்படுகின்றது.

இத்தகையக் கோட்டுடன் கூடிய மெய்யெழுத்துக்களை தனியாக ஒலிக்க முடியாது

மெய்யெழுத்தின் அளவு அரை மாத்திரையாகும்.

மெய்யெழுத்துக்களின் அளவு குடிலெழுத்துடன் சேரும்போது ஒரு மாத்திரையாகவும், நெடிலுடன் இரு மாத்திரைகளாகவும், நீண்ட நெடிலுடன் மூன்று மாத்திரைகளாகவும் கணக்கிடப்படுகிறது.

மேலே காட்டியபடி சம்ஸ்க்ருத அரிச்சுவடியில் 55 எழுத்துக்கள் உள்ளன.

அனுஸ்வாரமும், விஸர்கமும் ஸ்வரங்களின் ஒலி முடிவை குறிப்பதால் இவ்விரண்டும் தனி எழுத்துக்களாக கணக்கிடப்படுவதில்லை.

இவ்வெழுத்துக்கள் ஜிஹ்வாமூல்ய உபத்மானீயங்கள் (அரை விஸர்கங்கள்) பாணினியின் மாஹேஸ்வர சூத்திரங்களில் இடம் பெறாததால் அயோகவாஹா (अयोगवाहाः) என்று அழைக்கப்படுகின்றன.

அயோகவாஹ எழுத்துக்களை சேர்த்தால் சம்ஸ்க்ருத அரிச்சுவடியில் எழுத்துக்களின் எண்ணிக்கை 59 ஆகும்.

அடுத்து வருகின்ற மூன்றாவதுப் பாடத்தில் ஒலிகளின் உற்பத்தி ஸ்தானங்களின் அடிப்படையிலான வகைப்பாடுகளை காணலாம்.

# முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம்

பாடம் 3 – அறிச்சுவடி ஒலி வகைப்பாடு

प्रावेशिकः स्तरः

प्रथम–विभागः

वर्णमाला – तृतीयः पाठः – संस्कृतवर्णानां स्थानीयविभागः

இப்போது, நாம் கற்கப் போவது…

கண்ட்ய – कण्ठ्य

தாலவ்ய – तालव्य

மூர்தன்ய – मूर्धन्य

தன்த்ய – दन्त्य

ஓஷ்ட்ய – ओष्ठ्य

ஸ்வர வகைகள்

வ்யஞ்சன வகைகள்

அன்தஸ்த (अन्तस्थ) ஊஷ்ம (ऊष्म) வகைகள்

இதுவரை நாம் சம்ஸ்க்ருத உயிர் மெய்யெழுத்துக்களாக எழுத்துக்களின் பொதுவகைப்பாட்டினை அறிந்தோம்.

சம்ஸ்க்ருத எழுத்துக்களின் ஒலி உற்பத்தி ஸ்தானங்களை ஆதாரமாக்க் கொண்ட அற்புதமான விஞ்ஞான பூர்வமான வகைப்பாட்டினை இப்பாடத்தில் கற்கலாம்,

ஒலியுண்டாக உதவும் வாயுருப்புக்களின் அடிப்படையிலான வகைப்பாட்டினை பார்ப்போம். வகைப்பாடுகள் பின் வருமாறு விளங்குகின்றன.

| |
|---|
| **கண்ட்ய** |
| कण्ठ्यகண்ட்ய ஒலிகள் தொண்டையில் உண்டாகின்றன. |
| **தாலவ்ய** |
| तालव्य தாலவ்ய எழுத்துக்கள் தாடைகளின் உதவியுடன் ஒலிக்கப்படுகின்றன. |
| **மூர்தன்ய** |
| मूर्धन्य மூர்தன்ய எழுத்துக்களை ஒலிக்க வாயின் மேற்பாகம் முக்கிய பங்கு வகிக்கிறது. |
| **தன்த்ய** |
| दन्त्य தன்த்ய ஒலிகள் நாக்கு மேல் முன் பற்களை தொடுவதனால் ஏற்படுகின்றன, |
| **ஓஷ்ட்ய** |
| ओष्ठ्य ஓஷ்ட்ய எழுத்துக்களை ஒலிக்க உதடுகள் உதவுகின்றன. |

எழுத்துக்களை ஒலிப்பதில் வாய் உறுப்புகளுடன் நாக்கிற்கும் பங்குள்ளது, பின் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல்கள் மேற்கண்ட வகைப்பாட்டில் உயிர் எழுத்துக்களும் (ஸ்வரங்கள்) மெய்யெழுத்துக்களும் (வ்யஞ்சனங்கள்) எவ்வாறு அடங்குகின்றன மற்றும் நாக்கின் பங்கையும் காட்டுகின்றன.

## ஒலிவகைப்பாடு – ஸ்வரங்கள்

| தொகுதி | எழுத்துக்கள் |
|---|---|
| | |
| **கண்ட்ய कण्ठ्य**<br>எழுத்துக்களின் ஒலி தொண்டையிலிருந்து நாக்கின் உதவியில்லாமல் எழுகின்றன. | **अ आ** |
| | |

| | |
|---|---|
| **தாலவ்ய तालव्य**<br>எழுத்துக்கள் தாடைகள் பக்கவாட்டில் சற்றே விரிவதன் மூலம் உச்சரிக்கப்படுகின்றன. | **इ ई** |
| **ஓஷ்ட்ய ओष्ठय**<br>எழுத்துக்கள் ஒலிக்கும்பொழுது உதடுகள் குவிகின்றன. | **उ ऊ** |
| | |
| **மூர்தன்ய मूर्धन्य**<br>நாக்கு வாயின் மேற்புறத்தை தொடுவது போல் நீண்டு காற்று வெளியேறுவதனால் ஒலி உண்டாகிறது. | **ऋ ॠ** |
| | |
| **தன்த்ய दन्त्य**<br>நாக்கு மேல் முன்பற்களை நோக்கி நீண்டு காற்று வெளியேறும்பொழுது ஒலி உண்டாகிறது. | **ऌ** |

ஸ்வரங்கள் உச்சரிக்கப்படும்பொழுது நாக்கிற்கும் வாய் உறுப்புகளுக்கும் தொடர்பு ஏற்படுவதில்லை.

இரு ஒருயிர் எழுத்துக்கள் இணைந்து ஈருயிர் எழுத்துக்கள் ஒலிக்கப்படுகின்றன. அவைகள் இரு தொகுதி இணைந்த வகைகளாக தரப்படுகின்றன.

| | |
|---|---|
| **கண்ட தாலவ்ய**<br>**कण्ठतालव्य** | अ + इ = ए<br>आ + इ = ऐ |
| **கண்டோஷ்ட்ய**<br>**कण्ठोष्टय** | अ + उ = ओ<br>आ+उ=औ |

வ்யஞ்சன எழ்த்துக்களில் மூடொலிகளின் (स्पर्शव्यञ्जनानि) வகைப்பாடு கீழேக் கொடுக்கப்பட்டுள்ளது. உச்சரிக்க உதவும் வகையில் மெய் எழுத்துக்கள் '**அகாரத்துடன்**' இணைந்த வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளன.

# ஒலிவகைப்பாடு–வ்யஞ்சனங்கள்

| ஒலிவகைப்பாடு–வ்யஞ்சனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்ட்ய<br>**कण्ठ्य** | क | ख | ग | घ | ङ |
| தாலவ்ய<br>**तालव्य** | च | छ | ज | झ | ञ |
| மூர்தன்ய<br>**मूर्धन्य** | ट | ठ | ड | ढ | ण |
| தன்த்ய<br>**दन्त्य** | त | थ | द | ध | न |
| ஓஷ்ட்ய<br>**ओष्ठ्य** | प | फ | ब | भ | म |

- நாக்கு தொண்டையை லேசாக அடைத்து காற்று வெளியேறும்பொழுது கண்ட்ய வ்யஞ்சனங்கள் ஒலிக்கப்படுகின்றன.

- தாலவ்ய வ்யஞ்சனங்கள் ஒலிக்கும்பொழுது நாக்கின் நடுப்பாகம் வாயின் மேற்புறத்தை ஒட்டுகிறது.

- நாக்கின் நுனி வாயின் மேற்புறத்தை தொடுவதனால் மூர்தன்ய வ்யஞ்சன ஒலிகள் எழுகின்றன.

- நாக்கின் நுனி மேல் முன்பற்களை தட்டையாக தொடும்பொழுது தன்த்ய வ்யஞ்சன ஒலிகள் வெளிப்படுகின்றன.

- உதகடுள் ஒன்று சேர்ந்து ஒஷ்ட்ய வ்யஞ்சனங்கள் ஒலிக்கின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துக்கள் பொதுவாக தொகுதி வ்யஞ்சனங்கள் என அறியப்படுகின்றன (वर्गीय व्यञ्जनानि).

இவைப் பொதுவாக க வர்கம் (क वर्गः), ச வர்கம் (च वर्गः), ட வர்கம் (ट वर्गः), த வர்கம் (त वर्गः) மற்றும் ப வர்கம் (प वर्गः) என அறியப்படுகின்றன.

இவ்வியஞ்சனங்களின் பட்டியலில் தரப்படாத வகைப்பாடுகளையும் அறிவோம்,

தொகுதி அல்லது வர்கீய வ்யஞ்சனங்கள் மீண்டும் கர்க*ஶ* (कर्कश) அல்லது வல்லினங்கள், ம்ருது (मृदु) அல்லது மெல்லினங்கள் மற்றும் அனுநாஸிக (अनुनासिक) என்று மூன்றாக வகைப்படுத்தக்கடுகின்றன.

அனுநாஸிக ஒலிகளுக்கு வாய் உறுப்புகளுடன் மூக்கறையும் உபயோகப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் முதல் இரண்டு எழுத்துக்களும் கர்கஸ வகையாகவும், மூன்றாவது நான்காவது எழுத்துக்கள் ம்ருது வகையாகவும் தொகுதி கடைசியெழுத்து அனுநாஸிகமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

வர்க்கத்தின் முதல் இரண்டு எழுத்துக்கள் **அகோஷ** (अघोष) வகையாகவும் மூன்றாவது நான்காவது எழுத்துக்கள் கோஷவத் (घोषवत्) ஆகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

கோஷவத் வ்யஞ்சனங்கள் உச்சரிக்கப்படும்பொழுது ஒலி அதிர்வு ஏற்படுகிறது.

வர்கீய வ்யஞ்சனங்களில் அல்ப ப்ராண (अल्पप्राण) மற்றும் மஹா ப்ராண (महाप्राण) என்ற மூன்றாவது வகையான பிரிவும் உள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள முதல் மற்றும் மூன்றாவது எழுத்துக்கள் அல்ப ப்ராண வகையிலும், இரண்டாவது மற்றும் நான்காவது எழுத்துக்கள் மஹா ப்ராண வகையிலும் அடங்கும்.

அனுநாஸிக வ்யஞ்சனங்கள் அனுஸ்வாரத்தின் மெய்யெழுத்து வடிவங்களாகும். அனுநாஸிக எழுத்துக்களின் ஒலிகள் "न" வின் வேறுபட்ட வடிவங்களாகும்.

இப்பொழுது அரை உயிர் எழுத்துக்கள் (அந்தஸ்த) மற்றும் சீரெழுத்துக்களின் (ஊஷ்ம) வகைபாடுகளைப் பார்ப்போம்.

| தொகுதி | அன்தஸ்த (अन्तस्थ) ம்ருது (मृदु) | ஊஷ்ம (ऊष्म) கர்க*ஶ* (कर्कश) | |
|---|---|---|---|
| கண்ட்ய कण्ठ्य | | | ह ம்ருது (मृदु) மஹா ப்ராண (महाप्राण) |
| தாலவ்ய तालव्य | य | श | |
| மூர்தன்ய मूर्धन्य | र ळ | ष | |
| தன்த்ய दन्त्य | ल | स | |
| ஓஷ்ட்ய ओष्ठ्य | व | | |

ஊஷ்ம எழுத்துக்கள் சீறுதல் போன்ற ஒலிகளைக் கொண்டுள்ளன.

சம்ஸ்க்ருத எழுத்துக்களின் வேறுபட்ட வகைப்பாடுகள் துடக்கத்தில் குழப்புவது போலிருக்கும். பாடங்களில் முன்னேறும்பொழுது தெளிவு கிட்டும். அடுத்து வரும் இரு பாடங்களில் ஸ்வரங்கள் மற்றும் வ்யஞ்சனங்களின் அனைத்து வகைகளையையும் உள்ளடக்கிய தனிப் பட்டியல்களைப் பார்ப்போம். தொடர்ந்து சம்ஸ்க்ருத எழுத்துக்களை எழுதக் கற்கலாம்.

இப்பாடத்தைக் குறித்த உங்கள் கருத்துக்களை வேண்டுகிறோம். இலவசமாகப் பதிவுச் செய்து உங்கள் கருத்துக்களை Post செய்யவும்.

அடுத்து வருகின்ற நான்காவது பாடம்

சம்ஸ்க்ருத உயிரெழுத்துக்கள் – स्वराः – விரிவான நோக்கு.

# முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம்

பாடம் 4 – சம்ஸ்க்ருத உயிரெழுத்துக்கள் – स्वराः

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः वर्णमाला

चतुर्थः पाठः – स्वराः

இப்போது, நாம் கற்கப் போவது........

உயிரெழுத்துக்கள் – स्वराः

ஒருங்கிணைந்தப் பட்டியல்

உயிரெழுத்துக்கள் – स्वराः

மாத்ரா வகைப்பாடு

கடந்த இருபாடங்களில் ஸ்வர–வ்யஞ்சனங்களின் பிரிவுகளைப் பார்த்தோம். ஒவ்வொரு எழுத்துக்களும் எந்தெந்த பிரிவுகளில் என்பதை பட்டியலில் காணலாம்.

இப்பாடத்தில் ஸ்வரங்களின் ஒருங்கிணைந்தப் பட்டியலைப் பார்ப்போம்.

| ஸ்வரங்கள் – **स्वराः** | | | |
|---|---|---|---|
| எழுத்து | பிரிவு | எழுத்து | பிரிவு |
| अ | குறில் (ह्रस्व)<br>கண்ட்ய (कण्ठय) | आ | நெடில் (दीर्घ)<br>கண்ட்ய (कण्ठय) |
| इ | குறில் (ह्रस्व)<br>தாலவ்ய (तालव्य) | ई | நெடில் (दीर्घ)<br>தாலவ்ய (तालव्य) |
| उ | குறில் (ह्रस्व)<br>ஓஷ்ட்ய (ओष्ठय) | ऊ | நெடில் (दीर्घ)<br>ஓஷ்ட்ய (ओष्ठय) |
| ऋ | குறில் (ह्रस्व)<br>மூர்தன்ய (मूर्धन्य) | ॠ | நெடில் (दीर्घ)<br>மூர்தன்ய (मूर्धन्य) |
| ऌ | குறில் (ह्रस्व)<br>தன்த்ய (दन्तय) | ए | நெடில் (दीर्घ)<br>கண்டதாலவ்ய<br>(कण्ठतालव्य) |
| | | ऐ | நெடில் (दीर्घ)<br>கண்டதாலவ்ய<br>(कण्ठतालव्य) |
| | | ओ | நெடில் (दीर्घ)<br>கண்டோஷ்ட்ய<br>(कण्ठोष्ठय) |
| | | औ | நெடில் (दीर्घ)<br>கண்டோஷ்ட்ய<br>(कण्ठोष्ठय) |
| अं | அனுஸ்வார:<br>अनुस्वारः | अः | விஸர்க:<br>विसर्गः |

அனுஸ்வாரம் மற்றும் விஸர்கம் ஸ்வரங்களைத் தொடர்ந்து ஒலிக்கப்படுகின்றன.

அனுஸ்வார ஒலி ஸ்வர ஒலியைத் தொடர்ந்து வாயை மூடும்பொழுது உண்டாகிறது. ஸ்வரத்தைத் தொடர்ந்து மூச்சுக் காற்று வெளியேறுவது விஸர்கமாகிறது.

வேத மந்திரங்களில் குறில், நெடில் மற்றும் நீண்ட நெடில் (प्लुत) ஸ்வரங்களும் ஒலிக்கப்படுகின்றன.

இம்மூன்று பிரிவுகளைக் கீழேயுள்ளப் பட்டியல் காட்டுகிறது, ப்லுத (प्लुत) எழுத்துக்களைக் குறிக்கும் எண்கள் உச்சலிக்க தேவைப்படும் மாத்திரைகளைக் காட்டுகின்றன.

| குறில் ह्स्वाः | நெடில் दीर्घाः | நீள் நெடில் प्लुताः |
|---|---|---|
| अ | आ | अ3 |
| इ | ई | इ3 |
| उ | ऊ | उ3 |
| ऋ | ॠ | ऋ3 |
| ऌ | | ऌ3 |
| | ए | ए3 |
| | ऐ | ऐ4 |
| | ओ | ओ3 |
| | औ | औ4 |

- ஹ்ரஸ்வ எழுத்துக்கள் ஒரு மாத்திரை அளவு நீளம் உள்ளவை.

- தீர்க எழுத்துக்கள் பொதுவாக இரு மாத்திரைஅளவு நீளம் உள்ளவை. ऐ மற்றும் औ எழுத்துக்கள் ஒரு ஹ்ரஸ்வ ஒரு தீர்க எழுத்துக்கள் சேர்ந்து உருவாகுவதால் அவற்றின் நீளம் மூன்று மாத்திரை அளவாகிறது.

- ப்லுத எழுத்துக்கள் குறைந்த பக்ஷம் மூன்று மாத்திரை நீளமுள்ளவை.

- ஹ்ரஸ்வ உயிரெழுத்தான ऌ க்கு தீர்க வடிவில்லை.

- ஹ்ரஸ்வ, தீர்க மற்றும் ப்லுத ஒலிகளின் வேறுப்பாட்டையறிய குக்கு, குக்கூ, குக்கூ... என்ற குயிலோசையைக் கேட்டுப் பாருங்களேன்,

நமது அடுத்தப்பாடத்தில் சம்ஸ்க்ருத மெய்யெழுத்துக்களின் ஒருங்கிணைந்த வகைப்பாட்டினைக் காணலாம்.

ஐந்தாவது பாடம் சம்ஸ்க்ருத மெய்யெழுத்துக்கள் – व्यञ्जनानि – விரிவான நோக்கு.

## முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம்

பாடம் 5 – சம்ஸ்க்ருத மெய்யெழுத்துக்கள்

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

पञ्चमः पाठः – व्यञ्जनानि

இப்போது, நாம் கற்கப் போவது ...

மெய்யெழுத்துக்கள் – व्यञ्जनानि வர்கீய வ்யஞ்சனங்கள்

மெய்யெழுத்துக்கள் – व्यञ्जनानि அவர்கீய வ்யஞ்சனங்கள்

கடந்தப் பாடத்தில் ஸ்வர எழுத்துக்களின் வகைப்பாடு விவரப் பட்டியல்களைப் பார்த்தோம். இப்பாடத்தில் ஒவ்வொரு வ்யஞ்சன எழுத்துடனும் இணையும் பிரிவுகள் பட்டியலிடப்பட்டுள்ளது.

முதல் பட்டியல் 25 வர்கீய வ்யஞ்சனங்களுக்குறிய வகைகளைக் காட்டுகிறது.

## வர்கீய வ்யஞ்சனங்கள் – वर्गीय व्यञ्जनानि

**க வர்கம் क– वर्गः** **ச வர்கம் च वर्गः**

| எழுத்து | பிரிவு | எழுத்து | பிரிவு |
|---|---|---|---|
| क | மூடொலி (स्पर्श) வல்லினம் (कर्कश) அகோஷ அல்ப ப்ராண கண்ட்ய (कण्ठय) | च | மூடொலி (स्पर्श) வல்லினம் (कर्कश) அகோஷ அல்ப ப்ராண தாலவ்ய (तालव्य) |
| ख | மூடொலி (स्पर्श) வல்லினம் (कर्कश) அகோஷ மஹாப்ராண Guttural (कण्ठय) | छ | மூடொலி (स्पर्श) வல்லினம் (कर्कश) அகோஷ மஹாப்ராண தாலவ்ய (तालव्य) |
| ग | மூடொலி (स्पर्श) மெல்லினம் (मृदु) கோஷவத் அல்ப ப்ராண கண்ட்ய (कण्ठय) | ज | மூடொலி (स्पर्श) மெல்லினம் (मृदु) கோஷவத் அல்ப ப்ராண தாலவ்ய (तालव्य) |

| | | | |
|---|---|---|---|
| घ | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>கோஷவத்<br>மஹாப்ராண<br>கண்ட்ய<br>(कण्ठय) | झ | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>கோஷவத்<br>மஹாப்ராண<br>தாலவ்ய<br>(तालव्य) |
| ङ | மூடொலி<br>(स्पर्श)<br>அனுநாஸிக<br>(अनुनासिका)<br>அல்ப ப்ராண<br>கண்ட்ய<br>(कण्ठय) | ञ | மூடொலி<br>(स्पर्श)<br>அனுநாஸிக<br>(अनुनासिका)<br>அல்ப ப்ராண<br>தாலவ்ய<br>(तालव्य) |

ட வர்கம் ट वर्ग:

த வர்கம் त वर्ग:

| எழுத்து | பிரிவு | எழுத்து | பிரிவு |
|---|---|---|---|
| ट | மூடொலி<br>(स्पर्श)<br>வல்லினம்<br>(कर्कश)<br>அகோஷ<br>அல்ப ப்ராண<br>மூர்தன்ய<br>(मूर्धन्य) | त | மூடொலி<br>(स्पर्श)<br>வல்லினம்<br>(कर्कश)<br>அகோஷ<br>அல்ப ப்ராண<br>தன்த்ய<br>(दन्त्य) |

| | | | |
|---|---|---|---|
| ठ | மூடொலி<br>(स्पर्श)<br>வல்லினம்<br>(कर्कश)<br>அகோஷ<br>மஹாப்ராண<br>மூர்தன்ய<br>(मूर्धन्य) | थ | மூடொலி<br>(स्पर्श)<br>வல்லினம்<br>(कर्कश)<br>அகோஷ<br>மஹாப்ராண<br>தன்த்ய<br>(दन्त्य) |
| ड | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>கோஷவத்<br>அல்ப ப்ராண<br>மூர்தன்ய<br>(मूर्धन्य) | द | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>கோஷவத்<br>அல்ப ப்ராண<br>தன்த்ய<br>(दन्त्य) |
| ढ | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>கோஷவத்<br>மஹாப்ராண<br>மூர்தன்ய<br>(मूर्धन्य) | ध | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>கோஷவத்<br>மஹாப்ராண<br>தன்த்ய<br>(दन्त्य) |
| ण | மூடொலி<br>(स्पर्श)<br>அனுநாஸிக<br>(अनुनासिका)<br>அல்ப ப்ராண<br>மூர்தன்ய<br>(मूर्धन्य) | न | மூடொலி<br>(स्पर्श)<br>அனுநாஸிக<br>(अनुनासिका)<br>அல்ப ப்ராண |

# ப வர்கம் प वर्गः

| எழுத்து | பிரிவு | | |
|---|---|---|---|
| प | மூடொலி<br>(स्पर्श)<br>வல்லினம்<br>(कर्कश)<br>அகோஷ<br>அல்ப ப்ராண<br>ஓஷ்ட்ய<br>(ओष्ठय) | | |
| फ | மூடொலி<br>(स्पर्श)<br>வல்லினம்<br>(कर्कश)<br>அகோஷ<br>மஹாப்ராண<br>ஓஷ்ட்ய<br>(ओष्ठय) | | |
| ब | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>Ghoshavad<br>அல்ப ப்ராண<br>ஓஷ்ட்ய<br>(ओष्ठय) | | |
| भ | மூடொலி<br>(स्पर्श)<br>மெல்லினம்<br>(मृदु)<br>Ghoshavad<br>மஹாப்ராண | | |

| | | | |
|---|---|---|---|
| | ஓஷ்ட்ய (ओष्ठय) | | |
| म | மூடொலி (स्पर्श) அனுநாஸிக (अनुनासिका) Alpaprana ஓஷ்ட்ய (ओष्ठय) | | |

அவர்கீய வ்யஞ்சனங்களின் பட்டியலை இப்பொழுது பார்ப்போம்.

| அவர்கீய வ்யஞ்சனங்கள் – अवर्गीय व्यञ्जनानि | | | |
|---|---|---|---|
| **எழுத்து** | **பிரிவு** | **எழுத்து** | **பிரிவு** |
| य | அரை உயிர் எழுத்துக்கள் (अन्तःस्थ) மெல்லினம் (मृदु) தாலவ்ய (तालव्य) | र | அரை உயிர் எழுத்துக்கள் (अन्तःस्थ) மெல்லினம் (मृदु) மூர்தன்ய (मूर्धन्य) |
| ल | அரை உயிர் எழுத்துக்கள் (अन्तःस्थ) மெல்லினம் (मृदु) தன்த்ய (दन्त्य) | व | அரை உயிர் எழுத்துக்கள் (अन्तःस्थ) மெல்லினம் (मृदु) ஓஷ்ட்ய (ओष्ठय) |

| | | | |
|---|---|---|---|
| श | ஸீரொலி<br>(ऊष्म)<br>வல்லினம்<br>(कर्कश)<br>தாலவ்ய<br>(तालव्य) | ष | ஸீரொலி<br>(ऊष्म)<br>வல்லினம்<br>(कर्कश)<br>மூர்தன்ய<br>(मूर्धन्य) |
| स | ஸீரொலி<br>(ऊष्म)<br>வல்லினம்<br>(कर्कश)<br>தன்த்ய<br>(दन्त्य) | ह | மூச்சொலி<br>(ऊष्म)<br>மெல்லினம்<br>(मृदु)<br>கண்ட்ய<br>(कण्ठय) |

முந்தைய பாடங்களில் கண்டதுபோல, வ்யஞ்சன எழ்த்துக்கள் ஸ்வரங்களுடன் இணைந்தே ஒலிக்க முடியும்.

இக்காரணத்தால் இப்பாடப் பட்டியல்களில் வ்யஞ்சனங்கள் அகாரத்துடன் (अ) இணைந்தே கொடுக்கப்பட்டுள்ளன.

மற்ற ஸ்வரங்களுடன் இணைந்து கூட்டெழுத்துக்கள் அமையும் விதங்களை பின் வரும் பாடங்களில் காணலாம்

நமது அடுத்தப் பாடம்…

பாடம் 6 – எழுதக் கற்போம் – உயிர் எழுத்துக்கள் – लेखनाभ्यासः – स्वराः

பகுதி 1 – ஸம்ஸ்க்ருத எழுத்தறிவோம்

பாடம் 6 – ஸம்ஸ்க்ருத உயிரெழுத்துக்கள் – स्वरवर्णाः – எழுத்துப்பயிற்சி

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

षष्ठः पाठः – लेखनाभ्यासः – स्वरवर्णाः

இனி, நாம் கற்கப் போவது…

உயிரெழுத்துக்கள் எழுத்துப்பயிற்சி – स्वरवर्णाः लेखनाभ्यासः

நாம் இதுவரை சம்ஸ்க்ருத எழுத்துக்களின் அமைப்பு, வகைகள் மற்றும் பட்டியல்களைப் பார்த்தோம்.

இனி எழுத்துக்களை எழுதக் கற்கலாம்.

குறிப்பாக இப்பாடத்தில் ஸ்வர எழுத்துக்களை எழுதக் கற்கலாம்.

எழுத்துக்களில் எழுதுவதற்கான வரைவுகள் எண்வரிசைப்படிக் காட்டப்பட்டுள்ளன

எழுத்துக்களை நன்கு அறிய எழுத்துப் பயிற்சியே சிறந்து.

எனவே, இனி எழுத்துக்களை எழுதத் தொடங்குங்கள்.

# உயிரெழுத்துக்கள் – எழுத்துப்பயிற்சி

स्वरवर्णाः – लेखनाभ्यासः










6
7
2
1
4
3
5


3
1
2


4
1
3
2


7
1
3
4
5
2
6


8
1
3
4
5
6
2
7


3
1
2
4


3
2
1


3
4
2
1


6
1
7
3
4
5
2










ஸ்வர எழுத்துக்களை எழுதிப் பழகினீர்களா? அடுத்தப்பாடத்தில் சம்ஸ்க்ருத வ்யஞ்சனங்களை எழுதக் கற்கலாம்.

# முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம்

பாடம் 7 – சம்ஸ்க்ருத மெய்யெழுத்துக்கள்

व्यञ्जनवर्णाः – எழுத்துப்பயிற்சி

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

सप्तमः पाठः – व्यञ्जनवर्णाः

**लेखनाभ्यासः**

இனி, நாம் கற்கப் போவது…

மெய்யெழுத்துக்கள் எழுத்துப்பயிற்சி

व्यञ्जनवर्णाः लेखनाभ्यासः

சம்ஸ்க்ருத ஸ்வர எழுத்துக்களுடன் உங்களுக்கு நல்ல பரிச்சயமும் எழுதுவதில் தேர்ச்சியும் கிட்டியிருக்கும்.

இப்பாடத்தில் வ்யஞ்சனங்களை எழுதக் கற்கலாம்.

வ்யஞ்சன எழுத்துக்களும் எண்வரிசை வரைவுகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

ஸ்வர எழுத்துக்களை எழுதிய அதே உற்சாகத்துடனும் உறுதியுடனும் வ்யஞ்சனங்களையும் எழுதப் பயிலுவோம் வாருங்கள்…

# Sanskrit Vowels – Writting Practice

## स्वरवर्णाः – लेखनाभ्यासः


क – க


ख – க2


ग – க3


घ – க4




च – ச


छ – ச2


ज –ஜ


झ – ஜ2




ट – ட


ठ – ட2


ड – ட3


ढ –ட4




त – த


थ – த2


द – த3


ध – த4





प – ப



फ – ப2



ब – ப3



भ – ப4





य – ய



र – ர



ल – ல



व – வ



स – ஸ



श – *ஶ*



ष – ஷ



ह – ஹ

குறிப்பு:

மெய்யெழுத்துக்களை உயிரெழுத்துக்களின் துணையுடனேயே உச்சரிக்க இயலும். क् – க், च् – ச், ट् – ட், त् – த், प् – ப் என்று தனி வியஞ்சன எழுத்துக்கள் கீழே இடும் கோட்டினால் (ஹல – சின்ஹம்) அறியப்படுகின்றன.

இங்கு கொடுக்கப்பட்ட பட்டியலில் अ வுடன் இணைந்து ஒலிக்கும் வியஞ்சனங்களே கொடுக்கப்பட்டுள்ளன.

சரி, இதுவரை இந்த வ்யஞ்சன எழுத்துக்களை எழுதிப் பழகினீர்களா? உங்கள் அனுபவங்களையும், பரிந்துரைகளையும் எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

# முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம் – பாடம் 8

சம்ஸ்க்ருத கூட்டெழுத்துக்கள்

संयुक्तवर्णाः – எழுத்துப்பயிற்சி

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

अष्टम पाठः – संयुक्तवर्णाः लेखनाभ्यासः

இனி, நாம் கற்கப் போவது.......

கூட்டெழுத்துக்கள் எழுத்துப்பயிற்சி

संयुक्तवर्णाः लेखनाभ्यासः

கடந்த பாடங்களில் சம்ஸ்க்ருத ஸ்வர மற்றும் வ்யஞ்சன எழுத்துக்களை படிக்க மற்றும் எழுதக் கற்றோம்.

வ்யஞ்சன எழுத்துக்களை ஏதேனும் ஒரு ஸ்வர எழுத்துடன் இணைத்தே ஒலிக்க இயலும்.

உதாரணம்: क् + अ = क.

இரண்டு அல்லது அதற்கும் அதிகமான வ்யஞ்சனங்கள் ஸ்வரத்துடன் இணைந்து, கூட்டு எழுத்துக்கள் உருவாகின்றன.

எழுத்துக்களில் பல விதங்களாக கூட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன.

இப்பாடத்தில் நான்கு முக்கியமான கூட்டெழுத்துக்களைப் பற்றி அறிவோம்.

ஒவ்வொரு எழுத்தும் எழுதும் முறையுடன் அவைகள் எவ்வெழுத்துக்களின் கூட்டினால் உருவாகின்றன என்பதும் காட்டப்பட்டுள்ளது.

## ஸம்யுக்த எழுத்துக்கள் – எழுத்துப்பயிற்சி

संयुक्तवर्णाः लेखनाभ्यासः

क् + ष् = क्ष्
क्ष् + अ = क्ष



ज् + ञ् = ज्ञ्
ज्ञ् + अ = ज्ञ



त् + र् = त्र्
त्र् + अ = त्र



श् + र् = श्र्
श्र् + अ = श्र



மேலே நாம் கண்ட கூட்டெழுத்துக்கள் எழுதுவதற்கு முதலில் சற்றுக் கடினமாக இருக்கலாம். தொடர் பயிற்சிகள் மட்டுமே அதை எளிதாக்கும்.

கூட்டெழுத்துக்களை எழுதிப் பழகினீர்களா?

இதுவரை வ்யஞ்சனங்கள் अ ஸ்வரத்துடன் இணந்த வடிவுகளை ஒலியுடன் கண்டோம்.

மற்ற ஸ்வரங்களுடன் இணையும்போது அவைகள் எவ்விதம் எழுதப்படுகின்றன?

ஸ்வர சேர்க்கையைக் குறிக்க ஸ்வர மாத்ரா (स्वरमात्राः) குறிகள் உபயோகப்படுகின்றன.

இவைகள் குணிதா (गुणिताः) என்றும் அறியப்படுகின்றன.

ஸ்வரக் குறிகளைப் பற்றி அடுத்தப் பாடத்தில் கற்கலாம்.

இனிமேல், நமது அடுத்தப் பாடம்…

பாடம் 9 சம்ஸ்க்ருத எழுத்துக்குறிகள் – स्वरमात्राः

# முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம் – பாடம் 9

சம்ஸ்க்ருத உயிர் மெய்யெழுத்துக்கள் – எழுத்துக்குறிகள்

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

नवमः पाठः – स्वरमात्राः

இனி, நாம் கற்கப் போவது.......

அக்ஷரம் – வர்ணம்

ஸ்வர குறிகள்

உயிர் மெய்யெழுத்துக்கள்

**அக்ஷரம் – வர்ணம்**

சம்ஸ்க்ருத அரிச்சுவடி அக்ஷரமாலா அல்லது வர்ணமாலா என்று அழைக்கப்படுகிறது.

அக்ஷரம் (अक्षरः) என்றால் என்ன?

வர்ணம் (वर्णः) என்றால் என்ன?

தனியாக ஒலிக்கக்கூடிய அசை எழுத்து அக்ஷரம்.

வர்ணம் என்பது எழுதக்கூடிய மிக சிறிய அலகு (Unit).

தனித்து ஒலிக்கப்படுவதால் ஸ்வர எழுத்துக்கள் அக்ஷரங்களாகும், வ்யஞ்சனங்கள் தனித்து ஒலிக்கப்படாத்தால் அக்ஷரங்களாவதில்லை.

சம்ஸ்க்ருத்த்தில் மெய்யெழுத்துக்கள் வ்யஞ்சன வர்ணா; (व्यञ्जनवर्णाः) அல்லது வ்யஞ்சனானி (व्यनञ्जनानि) என்றே அழைக்கப்படுகின்றன.

வ்யஞ்சன எழுத்துக்களை ஏதேனும் ஒரு ஸ்வர எழுத்துடன் இணைத்தே ஒலிக்க இயலும்.

வ்யஞ்சனங்கள் ஸ்வரங்களுடன் இணைந்து உருவாகும் உயிர் மெய்யெழுத்துக்கள் அக்ஷரங்களாகும்.

மெய்யெழுத்துக்களை எழுதக் கற்கும்பொழுது ஸ்வர எழுத்து अ வுடன் இணைந்த क, ख, ग, घ போன்ற வடிவுகளைக் கண்டோம்.

இப்பாடத்தில் अ அல்லாத இதர உயிரெழுத்துக்களால் உருவாகும் உயிர் மெய்யெழுத்துக்களை குறிக்கும் குறிகளை அறியவும் எழுதவும் கற்கப் போகிறோம்.

குறிப்பிட்ட ஒவ்வொரு எழுத்துக்குறியும் ஸ்வர மாத்திரா (स्वरमात्रा) அல்லது குணிகா (गुणिका). என்று அழைக்கப்படுகிறது.

क् மெய்யெழுத்திலிருந்து உருவாகும் உயிர் மெய்யெழுத்துக்களின் பட்டியலைக் கீழே பார்க்கிறோம்.

சொற்களில் இவ்வெழுத்துக்களை அறிவதற்கு ஏதுவாக எடுத்துக்காட்டுகள் காட்டப்பட்டுள்ளன.

எழுத்துக்குறிகளையும் உயிர் மெய்யெழுத்துக்களையும் நன்கு அறிய எழுத்துக்களை முறையாக எழுதிப் பழகுங்கள்.

எழுத்துக்கள் இணைந்து எவ்வாறு சொற்கள் உருவாகின்றன என்பதையே எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன.

இப்பாடத்தில் சொற்களின் பொருள் முக்கியமில்லை. அதனை உச்சரிக்கும் விதமே மிகவும் முக்கியம்.

| உயிரெழுத்துக் குறிகள் | உயிர் மெய்யெழுத்து | சொல்லில் எழுத்து சேர்க்கை |
|---|---|---|
| अ | क् + अ = क (ka) | कथा = क् + अ + थ् + आ (Katha) |
| आ – ा | क् + आ = का (kaa) | काकः = क् + आ + क् + अः (Kaakah) |
| इ = ि | क् + इ = कि (ki) | किरातः = क् + इ + र् + आ + त् + अः (Kirathah) |
| ई = ी | क् + ई = की (ki) | कीचकः = क् + ई + च् + अ + क् + अः (Kiichakah) |
| उ = ु | क् + उ = कु (ku) | कुम्भः =क् + उ + म् + भ् + अः (Kumbhah) |
| ऊ = ू | क् + ऊ = कू (Koo) | कूर्मः = क् + ऊ + र् + म् + अः (Koormah) |
| ऋ = ृ | क् + ऋ = कृ (Kru) | कृष्णः = क् + ऋ + ष् + ण् + अः (Krishnah) |
| ॠ = ॄ | क + ॠ = कॄ (Kruu) | |
| ए = े | क् + ए = के (Ke) | केशः = क् + ए + श् + अः (Kesाah) |
| ऐ = ै | क् + ऐ = कै (kei) | कैवल्यम् = क् + ऐ + व् + अ + ल् + य् + अ + म् ( Kaivalyam) |
| ओ – ो | क् + ओ = को (ko) | कोकिलः = क् + ओ + क् + इ + ल् + अः (Kokilah) |
| औ – ौ | क् + औ = कौ (kow) | कौमारम् = क् + औ + म् + आ + र् + अ + म् (Koumaram) |
| अं = ं | क् + अं = कं (kam) | कंसः = क् + अं + स् + अः (Kamsah) |
| अः = ः | क् + अः = कः (kah) | कः = क् + अः(Kah) |

ऌ எழுத்துடன் இணைந்த உயிர் மெய்யெழுத்துக்கள் அரிதாக காணப்படுவதால் அவ்வெழுத்துக்கான குறி பட்டியலில் கொடுக்கப்படவில்லை.

क्ऌ என்று ऌ எழுத்தையே குறியாக எழுதலாம்.

முழு மெய்யெழுத்துக்களை குறிக்க கீழே இடப்படும் கோடு அல்லது ஹல சின்ஹம் விராம; என்றும் அழைக்கப்படுகிறது.

சம்ஸ்க்ருதத்தில் உயிர்மெய்யெழுத்துக்களை **ஸ்வர யுக்த வ்யஞ்சனானி** என அழைக்கிறோம்.

அதாவது, ஸ்வரத்துடன் இணைந்த வ்யஞ்சனங்கள் "**ஸ்வர யுக்த வ்யஞ்சனானி**" என அழைக்கப்படுகின்றது.

சரி! இனி உயிர் மெய்யெழுத்துக்களை எழுதிப் பழகலாம்.

பட்டியலின் முதல் வரிசை வ்யஞ்சனங்களுடன் எழுத வேண்டிய மாத்ரைகளை (मात्रा) அல்லது குறிகளைக் காட்டுகிறது.

கீழே அனைத்து ஸ்வரயுக்த வ்யஞ்சனங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் எழுத்துக்களை எழுதியும், சொல்லியும் பயிற்சி செய்யுங்கள்.

## Conjoint Consonants – स्वरयुक्त–व्यञ्जनानि

| | ◌ा | ि◌ | ◌ी | ◌ु | ◌ू | ◌ृ | ◌ॄ | ◌े | ◌ै | ◌ो | ◌ौ | ◌ं | ◌ः |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| क | का | कि | की | कु | कू | कृ | कॄ | के | कै | को | कौ | कं | कः |
| ख | खा | खि | खी | खु | खू | खृ | खॄ | खे | खै | खो | खौ | खं | खः |
| ग | गा | गि | गी | गु | गू | गृ | गॄ | गे | गै | गो | गौ | गं | गः |
| घ | घा | घि | घी | घु | घू | घृ | घॄ | घे | घै | घो | घौ | घं | घः |
| ङ | ङा | ङि | ङी | ङु | ङू | ङृ | ङॄ | ङे | ङै | ङो | ङौ | ङं | ङः |
| च | चा | चि | ची | चु | चू | चृ | चॄ | चे | चै | चो | चौ | चं | चः |
| छ | छा | छि | छी | छु | छू | छृ | छॄ | छे | छै | छो | छौ | छं | छः |
| ज | जा | जि | जी | जु | जू | जृ | जॄ | जे | जै | जो | जौ | जं | जः |
| झ | झा | झि | झी | झु | झू | झृ | झॄ | झे | झै | झो | झौ | झं | झः |
| ञ | ञा | ञि | ञी | ञु | ञू | ञृ | ञॄ | ञे | ञै | ञो | ञौ | ञं | ञः |
| ट | टा | टि | टी | टु | टू | टृ | टॄ | टे | टै | टो | टौ | टं | टः |
| ठ | ठा | ठि | ठी | ठु | ठू | ठृ | ठॄ | ठे | ठै | ठो | ठौ | ठं | ठः |
| ड | डा | डि | डी | डु | डू | डृ | डॄ | डे | डै | डो | डौ | डं | डः |
| ढ | ढा | ढि | ढी | ढु | ढू | ढृ | ढॄ | ढे | ढै | ढो | ढौ | ढं | ढः |
| ण | णा | णि | णी | णु | णू | णृ | णॄ | णे | णै | णो | णौ | णं | णः |
| त | ता | ति | ती | तु | तू | तृ | तॄ | ते | तै | तो | तौ | तं | तः |
| थ | था | थि | थी | थु | थू | थृ | थॄ | थे | थै | थो | थौ | थं | थः |
| द | दा | दि | दी | दु | दू | दृ | दॄ | दे | दै | दो | दौ | दं | दः |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ध | धा | धि | धी | धु | धू | धृ | धॄ | धे | धै | धो | धौ | धं | धः |
| न | ना | नि | नी | नु | नू | नृ | नॄ | ने | नै | नो | नौ | नं | नः |
| प | पा | पि | पी | पु | पू | पृ | पॄ | पे | पै | पो | पौ | पं | पः |
| फ | फा | फि | फी | फु | फू | फृ | फॄ | फे | फै | फो | फौ | फं | फः |
| ब | बा | बि | बी | बु | बू | बृ | बॄ | बे | बै | बो | बौ | बं | बः |
| भ | भा | भि | भी | भु | भू | भृ | भॄ | भे | भै | भो | भौ | भं | भः |
| म | मा | मि | मी | मु | मू | मृ | मॄ | मे | मै | मो | मौ | मं | मः |
| य | या | यि | यी | यु | यू | यृ | यॄ | ये | यै | यो | यौ | यं | यः |
| र | रा | रि | री | रु | रू | | रॄ | रे | रै | रो | रौ | रं | रः |
| ल | ला | लि | ली | लु | लू | | लॄ | ले | लै | लो | लौ | लं | लः |
| व | वा | वि | वी | वु | वू | वृ | वॄ | वे | वै | वो | वौ | वं | वः |
| श | शा | शि | शी | शु | शू | शृ | शॄ | शे | शै | शो | शौ | शं | शः |
| ष | षा | षि | षी | षु | षू | षृ | षॄ | षे | षै | षो | षौ | षं | षः |
| स | सा | सि | सी | सु | सू | सृ | सॄ | से | सै | सो | सौ | सं | सः |
| ह | हा | हि | ही | हु | हू | हृ | हॄ | हे | है | हो | हौ | हं | हः |
| क्ष | क्षा | क्षि | क्षी | क्षु | क्षू | क्षृ | क्षॄ | क्षे | क्षै | क्षो | क्षौ | क्षं | क्षः |
| ज्ञ | ज्ञा | ज्ञि | ज्ञी | ज्ञु | ज्ञू | ज्ञृ | ज्ञॄ | ज्ञे | ज्ञै | ज्ञो | ज्ञौ | ज्ञं | ज्ञः |
| त्र | त्रा | त्रि | त्री | त्रु | त्रू | | त्रॄ | त्रे | त्रै | त्रो | त्रौ | त्रं | त्रः |
| श्र | श्रा | श्रि | श्री | श्रु | श्रू | | श्रॄ | श्रे | श्रै | श्रो | श्रौ | श्रं | श्रः |

ஸ்வரயுக்த வ்யஞ்சனங்களை எழுதிப் பழகினீர்களா?

இப்பொழுது எழுத்துக்களை சொல்லிலிருந்து பிரித்துப் பழகலாம்.

இனி, பயிற்சிப் பாடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களில் எழுத்துக்களைப் பிரித்து எழுதி படித்துப் பழகவும்.

## பயிற்சிப் பாடம்

எடுத்துக்காட்டு; गायिका = ग् + आ + य् + इ + क् + आ

पोषकः =

कौशलम् =

भोजनशाला =

सहोदरी =

दूरवाणी =

कृषकः =

पेटिका =

हरिः =

धेनुः =

ऋतुः =

வ்யஞ்சனங்கள் ஸ்வரங்களுடன் இணைந்து உருவாகும் உயிர் மெய்யெழுத்துக்களின் வடிவங்களையும் ஒலிகளையும் கற்றோம்.

மேலே காணும் பயிற்சிக்கான விடைகளை அடுத்த பக்கத்தில் காணலாம்.

## பாடம் 9

पोषकः = प् + ओ + ष् + अ + क् + अः

कौशलम् = क + औ + श् + अ + ल् + अ + म्

भोजनशाला =भ् + ओ + ज् + अ + न् + अ + श् + आ + ल् + आ

सहोदरी = स् + अ + ह् + ओ + द् + अ + र् + ई

दुरवाणी = द् + ऊ + र् + अ + व् + आ + ण् + ई

कृषकः = क् + ऋ + ष् + अ + क् + अः

पेटिका =क् + ऋ + ष् + अ + क् + अः

हरिः = ह् + अ + र् + इः

धेनुः = ध् + ए + न् + उः

ऋतुः = ऋ + त् + उः

ஒன்று அல்லது கூடுதல் வ்யஞ்சனங்கள் ஒரு ஸ்வர எழுத்துடன் இணைந்து அக்ஷரங்கள் ஏற்படுகின்றன.

வயஞ்சனங்களின் சேர்க்கைகள் எவ்விதம் எழுதப்படுகின்றன?

## பாடம்

क् + उ = कुर्मःक् + ऊ + र् + म् + अः = कुर्मः + ण् + ड् + इ + क् + आ = कुण्डिका

म् + अ + त् + स्+ य् + अः = मत्सयः

क् + ऊ + र् + म् + अः = कुर्मः

व् + ऋ + क् + ष् + अः = वृक्षः

म् + अ + ण् + ड् + ऊ + क् + अः = मण्डूकः

व् + अ + र् + त् + उ + ल् + अ + म् = वर्तुलम्

ल् + अ + व् + अ + ङ् + ग् + अः = लवङ्गः

अ + ङ् + ग् + उ + ष् + ठ् + अः = अङ्गुष्ठः

त् + इ + न् + त् +र् + इ + ण् + ई = तिन्त्रिणी

ग् + र् + अ + न् + थ् + अः = ग्रन्थः

சம்ஸ்க்ருத கூட்டெழுத்துக்களை அடுத்தப் பாடத்தில் கற்கலாம்.

பாடம் 10 சம்ஸ்க்ருத கூட்டெழுத்து – संयुक्ताक्षराणि

# முதல் நிலைப்பாடங்கள்

பகுதி 1 – சம்ஸ்க்ருத எழுத்தறிவோம் – பாடம் 10

சம்ஸ்க்ருத கூட்டெழுத்துக்கள்

प्रावेशिकः स्तरः – प्रथम–विभागः – वर्णमाला

दशमः पाठः – संयुक्ताक्षराणि

இனி, நாம் கற்கப் போவது ...

கூட்டெழுத்து எழுதப் பொது விதிகள்

கூட்டெழுத்துப் பட்டியல்

இதுவரை நாம் கற்றது...

வ்யஞ்சனங்கள் (மெய்யெழுத்துக்கள்) ஸ்வரங்களின் துணையுடனே உச்சரிக்கப்படுகின்றன.

உயிர் மெய்யெழுத்துக்களில் ஸ்வரக் குறிகள். मात्राः

இப்பாடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வ்யஞ்சனங்கள் ஸ்வரத்துடன் இணைந்து உண்டாகும் சம்ஸ்க்ருத கூட்டெழுத்துக்களைக் கற்கலாம்.

இரண்டு அல்லது மேற்பட்ட வ்யஞ்சனங்கள் இணைந்து ஸம்யுக்த வ்யஞ்சனங்கள் உண்டாகின்றன. ஸம்யுக்த வ்யஞ்சனங்கள் ஸ்வரங்களுடன் இணைந்து ஒலிக்கக்கூடிய ஸம்யுக்த அக்ஷரங்கள் உருவாகின்றன.

**வ்யஞ்சனம் + வ்யஞ்சனம் = ஸம்யுக்த வ்யஞ்சனம்**

**ஸம்யுக்த வ்யஞ்சனம் + ஸ்வரம் = ஸம்யுக்தாக்ஷரம்.**

व्यञ्जनम् + व्यञ्जनम् = संयुक्तवर्णः

संयुक्तवर्णः + स्वरः = संयुक्ताक्षरम्

क् + क् = क्क्   कु + क् + क् + उ + ड् + अः = कुक्कुड

**அதாவது, இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட வ்யஞ்சனங்கள் ஸ்வரத்துடன் இணைந்து ஒலிக்கக்கூடிய "ஸம்யுக்தாக்ஷரம்" உருவாகின்றது.**

**ஸம்யுக்தாக்ஷரங்களை எழுதப் பொதுவான விதிமுறைகளை கீழேயுள்ள பட்டியலில் காணலாம்.**

**முதல் எழுத்தைப் பொறுத்து எவ்வாறு இணைந்த வடிவங்கள் அமைகின்றன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் காட்டப்பட்டுள்ளன.**

**சொற்களின் அர்த்தம் குறிப்பாக தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன.**

**சொற்களின் பொருள் மற்றும் முறையான பிரயோகங்கள் பின் வரும் பாடங்களில் காணலாம்.**

## கூட்டெழுத்துக்களை எழுதப் பொது விதிகள்

| முதல் வ்யஞ்சனம் | ஸம்யுக்தாக்ஷரம் | சொல்லில் ஸம்யுக்தாக்ஷரம் | குறிப்பு |
|---|---|---|---|
| क्, फ् | क् + क = क्क | कुक्कुडः (சேவல்) | முதலெழுத்தின் இறுதிப் பகுதி எழுதப்படுவதில்லை. |
| | क् + त = क्त | वक्ता (பேசுபவர்) | |
| ख् , घ्, च् छ, ज, झ, ञ, ण, त, थ, ध,न, प, ब, भ, म, ल, व, स, श, ष. | ख् + य = ख्य | मुख्य (முக்கியம்) | முதலெழுத்தின் செங்குத்துக்கோடு எழுதப்படுவதில்லை |
| | ध् + य = ध्य | श्लाघ्यम् (சிறந்தது) | |
| | च् + च = च्च | उच्चैः (உரக்க) | |
| | ज् + व = ज्व | ज्वरः (ஜுரம்) | |
| | ण् + ड = ण्ड | खण्डः (துண்டு) | |
| | त् + थ = त्थ | उत्थानम् (எழுதல்) | |
| | थ् + व = थ्व | पृथ्वी (பூமி) | |
| | ध् + म = ध्म | दध्मौ (ஊதுதல் வினைச்சொ) | |
| | न् + द = न्द | चन्दनम् (சந்தனம்) | |
| | प् + त = प्त | तप्त (சூடு) | |
| | ब् + ज = ब्ज | कुब्ज (வளைந்த) | |
| | भ् + य = भ्य | आरभ्य (தொடங்கி) | |
| | म् + ब = म्ब | अम्बा (அம்மா) | |
| | ल् +ल = ल्ल | पल्लवी (துளிர், முளை) | |
| | व् + य = व्य | काव्यम् (காவியம்) | |
| | स् + त = स्त | स्तरः (நிலை) | |

| | | | |
|---|---|---|---|
| | श् + य = श्य | पश्य (பார்) | |
| | ष् + ण= ष्ण | उष्णम् (வெப்பம்) | |
| | क् + व = क्व | पक्वम् (பக்குவம்) | |
| क, ङ, ट, ठ, द, ड, ढ | ङ् + क = ङ्क | पङ्कजम् (தாமரை) | இரண்டாவது எழுத்து முதல் வ்யஞ்சனத்தின் கீழ் எழுதப்படுகிறது |
| | ट् + ट = ट्ट | अट्टालिका (மாளிகை) | |
| | द् + ध = द्ध | बुद्धिः (புத்தி) | |
| र | र् + क = र्क | अर्कः (ரியன்) | र् ஒரு கொக்கிப் போல் தொடரும் எழுத்தின் மேல் இணைகிறது. |
| | र् + श = र्श | स्पर्श (தொடு) | |
| | र् + व = र्व | पर्वतः (மலை) | |
| ह | ह् + र = ह्र | ह्रस्व (குறுகிய) | ह् வை தொடரும் எழுத்து அதன் கீழ் இணைகிறது. அல்லது ह् வின் ஒரு பகுதியுடன் இணைகிறது |

இப்பொழுது ஒவ்வொரு எழுத்துக்குறிய கூட்டமைப்புக்களை விரிவாக காணலாம்.

# Sanskrit Compound Letters – संयुक्ताक्षराणि

1. – + क

क् + क = क्क कुक्कुडः (சேவல்)
ङ् + क = ङ्क अङ्कुरः (தளிர், முளை)
च् + क = च्क
ट् + क = ट्क षट्कः (ஆறு)
त् + क = त्क फूत्कारः (விசும்புதல்) (Six)
र् + क = र्क अर्कः (சூரியன்)
ल् + क = ल्क शुल्कः (விலை)
ष् + क = ष्क चतुष्कोणः (சதுர்கோணம்)
स् + = स्क स्कन्धः (தோள்)

2. – + ख

क् + ख = क्ख चक्खतुः
ङ् + ख = ङ्ख श्रृङ्खला (சங்கிலித் தொடர்)
त् + ख = त्ख उत्खननम् (தோண்டுதல்)
स् + ख = स्ख स्खलनम् (தடுமாற்றம்)

3. – + ग

ग् + ग = ग्ग गुग्गुलः
ङ् + ग = ङ्ग अङ्गुली (விரல்)
ड् + ग = ड्ग खड्गः (வாள்)
द् + ग = द्ग मुद्गरः (சுத்தி)
र् + ग = र्ग मार्गः (வழி)
ल् + ग = ल्ग फाल्गुनः

4. – + घ

ङ् + घ = ङ्घ सङ्घः (சங்கம்)
द् + घ = द्घ उद्घाटनम् (திறப்பு)
र् + घ = र्घ महार्घः (விலையுயர்ந்த)

5. – + च

च् + च = च्च उच्चैः (உரக்க)
ञ् + च = ञ्च आकुञ्चनम् (வளைதல்)
र् + च = र्च अर्चकः (அர்ச்சகர்)
श् + च = श्च पश्चात् (பிறகு)

6. – + छ

